தினமலர்
DINAMALAR
National Tamil Daily

# நினைவு சொற்பொழிவு

**கோவை, டிச.20–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், இந்திய வன மரபியலின் தந்தை என போற்றப்படும், டாக்டர் கேதார்நாத் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி, ஆன்லைன் முறையில் நடந்தது.

இதில், கொல்கத்தா தாவரவியல் ஆய்வு கழகத்தின் முன்னாள் இயக்குனர் சஞ்சப்பா, 'இந்தியாவில் மலர் பன்முகத்தன்மை: ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் பேசினார்.

சுற்றுச்சூழல் தகவல் மைய ஒருங்கிணைப்பாளர் கண்ணன் வாரியர், முதுநிலை முதன்மை விஞ்ஞானி சசிதரன், வன மரபியல் நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன், இந்திய வன ஆராய்ச்சி கல்விக் கழக துணை இயக்குனர் ஜெனரல் சர்மா, முதன்மை விஞ்ஞானி ராஜசேகரன், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைகள், கல்லூரிகளை சேர்ந்த 190 பேர் பங்கேற்றனர்.

News in Dinamalar, 20.12.2020, Coimbatore, Dr S. Kedharnath Memorial Lecture.